

தந்தி டிவி லோகோவை பயன்படுத்தி உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பியவர்கள் மீது உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்தார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.ராஜா, ஜி.இரவிச்சந்திரன், பி.வி.ஆர்.விசுவநாதன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு ஆளுநர் வரம்பு மீறிச் செயல்படுகிறார்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி



புதுக்கோட்டை,ஜூன் 12-

புதுக்கோட்டையில் நவீன முறை சலவையகத்தை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், நேற்று முன் தினம் ஆளுநர் ஒரு அறிக்கை கொடுத்துள்ளார், இந்த பல்கலைக்கழகங்களில் இன்னென்ன தேதிகளில் பட்டமளிப்பு விழாக்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம் என்று,பட்டமளிப்பு விழா குறித்து கொரோனா காலத்தை நாங்கள் சொல்லவில்லை, அப்போது இவர் இல்லை, அப்போது ஆளுநர் வேறு,உரிய காலத்தில் பட்டமளிப்பு விழாக்களை நடத்தினால் தான் அது மாணவர்களுக்கு பயனாக இருக்கும்,

தமிழக ஆளுநர் வரம்பு மீறி செயல்படுகிறார், ஜனாதிபதியையே பதவியை விட்டு இறக்கக்கூடிய அதிகாரம் அரசியல் சட்டத்தில் உள்ளது, ஜனாதிபதியின் ஏஜெண்ட் தான் ஆளுநர், ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் பாலமாக செயல்பட வேண்டிய ஆளுநர், சண்டை மூட்டும் நபராக செயல்பட்டு வருகிறார், இவர் குறித்து நீதி மன்றத்திற்கு சென்றால் மிகப்பெரிய விமர்சனங்களை ஆளுநர் சந்திப்பார்,

மற்ற மாநிலங்களில் ஆளுநருக்கு எதிராக உள்ள நீதிமன்ற தீர்ப்பு தமிழக ஆளுநருக்கு தக்க பாடத்தை கற்பிக்கும் என்றார்.

## தண்ணீர் பந்தல் திறப்பு!

சென்னை, ஜூன் 12–

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப்பகுதி 168 அ வட்டம் கிண்டி பேருந்து நிலையம் அருகில் 270 லிட்டர் கொள்ளளவு உள்ள தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் சைதை கிழக்குப் பகுதி செயலாளர் 13–வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், 168–வது வட்ட கழக செயலாளர் நா.ராதா கிருஷ்ணன், ச.சேகர், கோ.தனசேகரன், ஆர்.கிருஷ்ண குமார், ஏ.சீனிவாசன், ஜி.என்.நாராயணன், பார்சன் கே.லோகு, பி.ஆகாசம், முத்துமாரியப்பன், ஜி.வெங்கடேஷ், கே.சிவாஜி, டி.இளையராஜா, கி.சிவபிரகாஷ், குணாமேகநாதன், ஜே.தவமணி, எம்.எஸ்.எம்.சேக், வா.கதிர்வேல், குருமூர்த்தி, எம்.ஸ்ரீதர், க.ஆதிகேசவன், க.குரு முகம், குணா குருமூர்த்தி, சி.செல்வதுரை மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.06.2023) சென்னை துறைமுகத்தில், தமிழ்நாடு காவல் துறையில் மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டை முன்னிட்டு "சென்னை - கோடியக்கரை - சென்னை" பாய்மரப் படகு பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான பி.கே.சேகர்பாபு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, சென்னை துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் சுனீல் பலீவால், தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வுவாரியத்தின் தலைவர்/காவல்துறை இயக்குநர் திருமதி.சீமாஅகர்வால், கடலோர பாதுகாப்பு குழுமம் முனைவர் சந்தீப் மித்தல் ஆகியோர் உள்ளனர்.

# திருப்பூர் மாநகராட்சி உழவர் சந்தையில்

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திடீர் ஆய்வு!

திருப்பூர், ஜூன் 12-

அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள உழவர் சந்தையில் நேற்று முன்தினம் அதிகாலையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த காய்கறிகளை பார்வையிட்டு, பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்து, அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்து, உழவர் சந்தை அலுவலகத்தை ஆய்வு மேற்கொண்டு அங்கு வைக்கப்பட்டுள்ள காய்கறிகளின் விலைப் பட்டியல் மற்றும் பதிவேடுகளைபார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது ; முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கடந்த 1999 ஆண்டு விவசாயிகளின் நலன்காக்க தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து பகுதிகளிலும் உழவர் சந்தை திட்டம் துவக்கிவைக்கப்பட்டது. உழவர் சந்தை என்பது விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் பயிரிடும் காய்கறிகள், பழங்களை அவர்களே இடைத்தரகர்களின்றி நேரடியாக விற்பனை செய்வதற்காக தமிழகத்தின் பல இடங்களில் அமைத்த சந்தைகள் ஆகும். உழவர் சந்தையில் ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியே இடம் ஒதுக்கப்பட்டு இலவசமாக எடைக் கருவிகள் வழங்கப்படுகின்றன. உழவர் சந்தையில் விற்பனை மேற்கொள்ள விவசாயிகளுக்குத் தனி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை பெற்றவர் தவிர அவருடைய குடும்ப உறுப்பினர்கள் சந்தைக்கு உற்பத்திப் பொருட்களைக் கொண்டு வரக்கூடும் என்கிற நோக்கத்தில் குடும்ப உறுப்பினர்கள் படமும் அந்த அடையாள அட்டையில் இடம் பெற்றுள்ளன. உழவர் சந்தை ஒவ்வொன்றிற்கும் தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் உழவர் சந்தையில் பல இடங்களில் விலைப்பட்டியல் பலகை வைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தை விலைகளை அதற்காக நியமிக்கப்பட்ட குழு நாள்தோறும் நிர்ணயிக்கிறது. பொதுமக்கள் அனைவரும் உழவர் சந்தையில் தங்களுக்கு தேவையான காய்கறிகள் மற்றும் பழங்களை வாங்கி பயன்பெற வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

# நாகை, மயிலாடுதுறை மாவட்டத் திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் நிவேதா எம்.முருகன், என்.கௌதமன் அறிவிப்பு!

மயிலாடுதுறை, நாகை மாவட்டத்திற்கான திட்டக்குழு தேர்தல் வரும் 23.6.2023 அன்று நடைபெற உள்ளது.

மேற்படி தேர்தலில் கீழ்க்காணும் கழகத் தோழர்கள் ஊரகப் பகுதி மற்றும் நகரப் பகுதிகளுக்கான வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள்.

**ஊரகப் பகுதிக்கான வேட்பாளர்கள்**

| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர் பெயர் |
|---|---|
| மாவட்ட ஊராட்சி 1 வது வார்டு உறுப்பினர் | விஜயபாரதிகென்னடி |
| மாவட்ட ஊராட்சி 3வது வார்டு உறுப்பினர் | தியாக.விஜயேஸ்வரன், |
| மாவட்ட ஊராட்சி 5வது வார்டு உறுப்பினர் | என்.இளையபெருமாள், |
| மாவட்ட ஊராட்சி 8வது வார்டு உறுப்பினர் | வெண்ணிலாதென்னரசன் |
| மாவட்ட ஊராட்சி 10வதுவார்டு உறுப்பினர் | ராபியாநர்கீஸ்பானு |
| மாவட்ட ஊராட்சி12 வது வார்டு உறுப்பினர் | ஆர்.விஜயா |
| மாவட்ட ஊராட்சி 16 வது வார்டு உறுப்பினர் | செல்விவீரமணி |
| மாவட்ட ஊராட்சி 17 வது வார்டு உறுப்பினர் | கௌசல்யாஇளம்பரிதி |
| மாவட்ட ஊராட்சி 19வது வார்டு உறுப்பினர் | வீ.சோழன் |

**நகர பகுதிக்கான வேட்பாளர்கள்**

| நகராட்சி/ பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர் பெயர் |
|---|---|
| மயிலாடுதுறை நகராட்சி 30 வது வார்டு | எம்.சக்திவிஜய் |
| நாகை நகராட்சி 34 வது வார்டு | ஆர்.ஏ.டி.அண்ணாதுரை |
| கீழ்வேளூர் பேரூராட்சி 11 வது வார்டு | ம.ராசாத்தி |

மயிலாடுதுறை, நாகை மாவட்டத்திற்கன ஊரக மற்றும் நகர திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்பிற்கு போட்டியிடுவதற்காக நாகை, மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கழக வேட்பாளர்களை மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வெற்றி பெற செய்திட அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**என்.கௌதமன்,**
செயலாளர்,
நாகை மாவட்ட தி.மு.க.

**நிவேதா எம்.முருகன்,**
செயலாளர்,
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய பகுதிகளில், கடும் காற்று அடித்ததன் விளைவாக, சூரக்காடு, வாணக்கன்காடு, பெரியவிடுதி, கோட்டைக்காடு ஆகிய பகுதிகளில் வாழை மரங்கள் சாய்ந்து விவசாயிகளுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, அப்பகுதிக்குச் சென்று புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் விவசாயிகளை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, ஒன்றிய கழக செயலாளர் தவ.பாஞ்சாலன், கறம்பக்குடி ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜாராமன் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# அனைத்துத் துறைகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வெற்றி கண்டவர் தலைவர் கலைஞர்!

## அயப்பாக்கத்தில் நடைபெற்ற கிராமிய கலை விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

திருவள்ளூர், ஜூன் 12-

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற கலை பண்பாட்டு இயக்கம் சார்பில் 100 கலைஞர்கள் பங்கேற்கும் கிராமிய கலை விழா பேரறிஞர் அண்ணா பசுமை எழில்மிகு பூங்காவில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கழகப் பொருளாளரும் தமிழ்நாடு நாடாளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி தலைமை தாங்கினார்

மதுரவாயில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி முன்னிலை வகித்தார் அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மன்ற தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரைவீர மணி வரவேற்புரையாற்றினார்

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற குழு துணை தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி நூறு கலைஞர்கள் பங்கேற்ற கிராம கலை விழா நிகழ்ச்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார் நிகழ்ச்சியில் பேசிய கனிமொழி கருணாநிதி,



சங்கத் தமிழுக்கு பிறகு தமிழிலும் தமிழ் நாட்டிலும் மக்களை பற்றி பேசுவது இந்த மண் சார்ந்த கலைஞர்கள் மட்டும் தான், நம்முடைய பாரம்பரியம் என்று சொல்லும் போது இந்த மண் சார்ந்த கலைஞர்கள் வார்த்தைகள் வடிவங்களில் மட்டும் தான் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் இந்த கலைஞர்களை தலைவர் கலைஞர் ஒவ்வொரு நாளும் நேசித்தார் தமிழ் மண் சார்ந்த கலைஞர்களை மிகப்பெரிய அளவில்

கொண்டாடிய தலைவர் மதித்த தலைவர் உணர்ந்து புரிந்து கொண்ட தலைவர் கலைஞர் என்ற காரணத்தால் தற்போது அவருடைய நூற்றாண்டு விழாவில் கிராமிய கலைஞர்களை அழைத்து மீண்டும் சமூகத்தை பற்றியும் நாட்டை பற்றியும் அக்கறையுடன் செய்திகளை சொல்லுங்கள் என இந்த நிகழ்வுகளை நடத்தி கொண்டிருக்கிறோம்..

ஒவ்வொரு நாளும் நம்மை ஆச்சரியப்படுத்த கூடிய தலைவராகவே வாழ்ந்தவர் கலைஞர் என புகழாரம் சூட்டினார்..

அனைத்து துறைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அதில் வெற்றியை கண்டிருக்கும் மனிதர் இருக்கிறார் என்றால் அது நம்முடைய தலைவர் கலைஞர் தான்..

ஒரு மனிதனை பற்றி ஓராண்டு முழுக்க பேச முடியும் என்றால் அது தலைவர் கலைஞர் பற்றி தான், ஓராண்டு கடந்து அவரை பற்றி பேசக்கூடிய செய்திகள் நிச்சயமாக இருக்கும் என தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பாரம்பரிய கலைஞர்களுடன் புகைப்படம் எடுத்தப் பின் பசுமை பூங்காவை சுற்றி பார்வையிட்ட கனிமொழி கருணாநிதி எம்.பி. மரக்கன்றுகளை நடவு செய்தார்.. பின் அங்கு நிறுவப்பட்டிருந்த கலைஞர் சிலை அருகே புகைப்படம் எடுத்து கொண்டார். இதில் தமிழ்நாடு இயல் இசை கலை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் செயலாளர் விஜயா தாயன்பன், மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் ரிஷப், வில்லிவாக்கம் ஒன்றிய குழு தலைவர் கிரிஜா, மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலை இசை கலைஞர்கள் அரசுத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வேளச்சேரி நீச்சல் குளம் வளாகத்தில் ரூ.1.50 கோடியில்

# தரம் உயர்த்தப்பட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் - கூடுதல் மேம்பாட்டு வசதிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன்12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின் படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

சென்னை, வேளச்சேரி நீச்சல் குள வளாகம் 4,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய இருக்கை வசதிகள், 50மீ x 25 மீ அளவு கொண்ட 8 வரிசைகள் உள்ள ஒரு சர்வதேச தரத்திலான பந்தய நீச்சல் குளம், 18 மீ x 25 மீ x 5 மீ அளவிலான ஒரு குதித்தல் குளம் மற்றும் 25 மீ x 25 மீ அளவிலான ஒரு பயிற்சி நீச்சல் குளம், குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம், இறகுப்பந்து உள்ளரங்கம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் உள்ளரங்கம் ஆகிய வசதிகளை கொண்டுள்ளது.

சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் அமைந்துள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் நவீன ஜிம்னாஸ்டிக் உபகரணங்கள் வழங்கப்பட்டு, புதியதாக பயிற்றுநர் அறை, மாணவ மாணவி யர்களுக்கான உடை மாற்றும் அறை மற்றும் ஆண், பெண் இருபாலருக்கான கழிவறைகள் கட்டப்பட்டு மற்றும் எல்.இ.டி. மின்விளக்குகள் பொருத்தப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

வேளச்சேரி நீச்சல் குளம் வளாகத்தில் தரம் உயர்த்தப்பட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் மற்றும் கூடுதல் மேம்பாட்டு வசதிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.06. 2023) திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து நடைபெற்ற ஜிம்னாஸ்டிக்ஸ் மாணவ, மாணவியர்களின் சாகச நிகழ்ச்சிகளை அமைச்சர் பெருமக்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கண்டுகளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மண்டல குழுத் தலைவர்கள் இரா. துரைராஜ், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## முதலமைச்சரின் தொடர் நடவடிக்கையால் தமிழ்நாட்டிற்கு வரும்

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு!

## தென்காசியில்–சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

தென்காசி, ஜூன் 12-

தென்காசி மாவட்டத்தில் சுற்றுலா தல மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளபட வேண்டிய வளர்ச்சி பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சுற்றுலா தல மேம்பாட்டு திட்டத்தின் கிழ் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தென்னிந்தியாவின் “ஸ்பா” என்று அழைக்கப்படும் தென்காசி மாவட்டம்,குற்றாலம் அருவிப் பகுதிகளை மேம்படுத்த ரூ.15.00 கோடியில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று 20222023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகளில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்திருந்தார்.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி மற்றும் உணவகம், படகு குழாம் ஆகிய பகுதிகளை ஆய்வு செய்தார். குற்றாலத்தில் உள்ள பழைய குற்றாலம், பிரதான அருவி, ஐந்தருவி மற்றும் புலி அருவி ஆகிய பகுதிகளில் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள திட்டப்பணிகளை ஆய்வு செய்தார். குற்றாலத்தில் சுற்றுலா தல மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட உள்ள திட்டப்பணிகளை ஆய்வு செய்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தாவது,

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 இல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் மட்டும் 2,67,773 ஆக உயர்நதுள்ளது. இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021இல் 11,53,36, 719 ஆக இருந்து



2022இல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023இல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் 6,64,90,154 என உயர்ந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை கொடைக்கானல், உதகமண்டலம், பைக்காரா, ஏற்காடு, முட்டுக்காடு, முதலியார் குப்பம், பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

தற்போது பிரதான அருவிப்பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் துவங்கப்பட உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் உடை மாற்றும் அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை, தோரணவாயில் புதுபித்தல், பாதை சீரமைத்தல், சிறுவர் பூங்கா மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. விரைவில் மற்றபகுதிகளிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுற்றுலாபயணிகள் பயன்பெறுவார்கள். குண்டாறு அணைக்கட்டுப் பகுதியில் சுற்றுலாத்துறையின் சார்பாக படகு போக்குவரத்து மற்றும் சாகச சுற்றுலா நடத்துவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.